நாள்: 05.03.2025
MCOP.66/2015
பெயர் பன்னீர்செல்வம்
எ.ம.சா.1

<u>**குறுக்கு விசாரணை**</u>

விபத்து பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. நான் கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து சமயம் TN69AA4969 என்ற பதிவு கொண்ட லாரி எங்களுடைய காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன முருகனுக்கு 40 வயது என்றால் சரிதான். அவருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரிதானா என்றால் பதிவு எண் தெரியாத டாடா சுமோ வாகனம் முருகன் மீது மோதியதாகத்தான் வழக்கு உள்ளது. மற்ற விபரங்கள் சரிதான். அதுகுறித்து தான் முதல் தகவல் அறிக்கையும், குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்து சமயம் TN69AA4969 என்ற பதிவு கொண்ட லாரி எங்களுடைய காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்ததால் நாங்களும் கூட்டாக இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.